DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.61/2024

**prosecution witness: PW–1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிவேல் | தொழில்/ பதவி | : இறால் வியாபாரம் |
| த/பெ. | : முத்துகிருஷ்ணன் | வயது | : 59 |
| ஊர் | : பேய்கரும்பு | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>04.06.2026</u>

(எதிரி ஆஜர், மனுதாரர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>

1. நான் குடியிருந்து வரும் ஊர் பேய்க்கரும்பு கிராமம் என்றால் சரிதான். அது தங்கச்சிமடம் ஊராட்சிக்குட்பட்டது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு விபரங்கள் கூறியது யார் என்றால் வழக்கறிஞர். ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியும். அவர் எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் பெரியார் நகர், இராமேஸ்வரம். எதிரியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஆம். அவர் எந்த வகையில் தெரியும் என்றால் அவரது கணவர் எல்.ஐ.சி. ஏஜெண்ட்டாக இருந்தார். அவர் மூலம் தெரியும். அவரது கணவர் எத்தனை வருடமாக எல்.ஐ.சி. ஏஜெண்ட்டாக இருந்தார் என்றால் தெரியாது. எதிரியை அவரது கணவர் மூலமாகத்தான் தெரியும் என்று புகார் மனுவில் சொல்லியுள்ளிர்களா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரியை எவ்வகையில் தெரியும் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. முன்பின் நன்கு அறிமுகம் இல்லாத நபர்களுக்கு பணம் கொடுப்பதில்லை என்றால் சரிதான்.

2. பொதுவாக பெரிய தொகையை ஒரு நபருக்கு கடனாக கொடுக்கும்போது அது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்தான் கொடுப்போம் என்றால் சரிதான். உறவினரோ, நண்பர்களோ அல்லாத நபர்களுக்கு பணம் கடனாக கொடுக்கும்போது வட்டிக்குத்தான் பணம் கொடுப்போம் என்றால் சரிதான். எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்ற விபரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான்

தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும் புகார் மனுவிலும் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் சொல்லி தயார் செய்யப்பட்டது. ம.சா.ஆ.3 ஆவணத்தில் பின்பக்கத்தில் நாள் என்ற இடத்தில் தேதி சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் யார் வந்து பணம் கேட்டது என்றால் எதிரியும், அவரது கணவரும் வந்து கேட்டார்கள். எதிர்மனுதாரும் அவரது கணவரும் வந்து பணம் கேட்டார்கள் என்ற விபரத்தை ம.சா.ஆ.3 ஆவணத்திலும், புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் அவரது கணவர் வந்து கேட்டதாக குறிப்பிடவில்லை எதிர்மனுதாரர் வந்து கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரும் அவரது கணவரும் எந்த தேதியில் வந்து பணம் கேட்டார்கள் என்றால் 14.01.2024 ம்தேதி வீட்டில் வைத்து கேட்டார்கள். எத்தனை மணிக்கு வீட்டில் வந்து பணம் கேட்டார்கள் என்றால் காலை 11.00 மணி. எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரரும் அவரது கணவரும் என்னிடம் வந்து பணம் கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கு வைத்து பணம் கேட்டார் என்ற விபரம் கூறப்படவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கறிஞர் அறிவிப்பில் பணத்தை எதிர்மனுதாருக்கு எங்கு வைத்து கொடுத்தேன் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரும் அவரது கணவரும் காலை 11.00 மணிக்கு வந்து பணம் கேட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரும் அவரது கணவரும் ரூ.3 இலட்சம் பணம் வாங்கினார்கள். அந்த பணம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 14.01.2024 ம் தேதி.

5. எதிர்மனுதாரரும் அவரது கணவரும் கேட்ட பணத்தை எந்தவகையில் தயார் செய்து கொடுத்தீர்கள் என்றால் இறால் வியாபாரம் பணம் பரிவர்த்தனை மூலம் செய்து வருவதால் என்னிடம் பணம் இருந்தது. எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் இந்த விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். ஒரு பெரிய தொகையை எதிர்மனுதாருக்கும் அவரது கணவருக்கும் கொடுத்ததாக சொல்லப்பட்ட நிலையில் அந்த தேதியில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆம். அந்த கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். ரூ.3 இலட்சத்திற்கான வட்டி விகிதம் நிர்ணயித்தாக புகார் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரம் அவரது கணவரும்

உறவினர் இல்லாதநிலையில்ல பெரிய தொகையை கடனாக பெற்றதாக கூறியிருக்கும் பட்சத்தில் அதற்காக எழுத்துமூலமான ஆவணங்கள் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். அதற்குத்தான் காசோலை பெறப்பட்டுள்ளது. நான் வீட்டில் வைத்து பணம் கொடுத்தபோது வேறு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்தீர்களான என்றால் இல்லை. வீட்டில் வைத்து கொடுத்தால் எனது மனைவி மக்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். இதனை எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

6. எதிர்மனுதாரர் கொடுத்தது எந்த வங்கி காசோலை என்றால் இராமேஸ்வரம், இந்தியன் வங்கி கிளை ஆகும். அந்த காசோலை எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 18.02.2024 ம் தேதி. எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பில் பத்தி 2 வரி 6 ல் கடன்தொகையை பெற்றுக்கொண்ட தாங்கள் கணக்கு வைத்திருக்கும் இந்தியன் வங்கி கிளையின் காசோலையை 18.02.2024 ம் தேதியிட்டு எனது கட்சிக்காரர் வசம் கொடுத்துள்ளீர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற விபரங்களான அந்த காசோலையை யார் பூர்த்தி செய்து கொடுத்தார்கள் கையொப்பம் இட்டு கொடுத்தார்கள் என்ற விபரம் எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறப்படவில்லை என்றால் சரிதான். 18.02.2024 ம் தேதி காசோலையை எதிரி கொடுத்தாக சொல்லியுள்ளதில் அன்றைய தேதியில் காசோலையை கலெக்ஷனுக்கு போடச் சொன்னார் என்றால் 18.02.2024 தேதிக்கு பின் எப்போது வேண்டுமானாலும் கலெக்ஷனுக்கு போடலாம் என்று கூறினார். மேற்படி விபரத்தை எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

7. எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 13.03.2024 ம் தேதி காசோலை கலெக்ஷனுக்கு போடவேண்டும் என்று சொல்லியிருந்தால் அது தவறு. 18.02.2024 க்கு பிறகு எப்போது வேண்டுமானாலும் கலெக்ஷனுக்கு போடலாம் என்று சொல்லியிருந்தார். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிர்மனுதாரரும் அவரது கணவரும் எவ்வளவு காலத்தில் பணத்தை திருப்பி தருவதாக கூறினார்கள் என்றால் 2 மாத காலத்தில் தருவதாக சொல்லியுள்ளார்கள். எனது புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் 2 மாத காலத்திற்குள் திருப்பி செலுத்தாதால் எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர்களிடம் எப்போது எந்த தேதியில் போய் பணத்தை திருப்பி

கேட்டேன் என்ற விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் 2 மாத தவணை என்பது எந்த தேதியில் இருந்து 14.01.2024 இருந்து ஆகும். 2 மாத தவணை என்பது 14.03.2024 ம் தேதி முடியும் என்றால் சரிதான். எந்த தேதியில் 2 மாத தவணை முடிந்து எதிரியிடம் பணம் கேட்டீர்கள் என்பதை எனது புகார் மனுவிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் பாரா 3 ல் கடனாக கொடுத்த ரூ.3 இலட்சத்தை எதிர்மனுதாரிடம் கேட்டபோது காசோலையை கலெக்ஷனுக்கு செலுத்தினால் நிச்சயம் ஹானர் செய்யப்படும் என்று சொல்லப்பட்டநிலையில் எந்த தேதியில் காசோலையை கலெக்ஷனுக்கு செலுத்தினார் ஹானர் செய்யப்படும் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். காசோலையை கலெக்ஷனுக்கு செலுத்திய பின் எப்போது தகவல் கிடைத்தது என்றால் 14.03.2024 ம் தேதி.

8. அதில் காசோலை எதனால் திருப்பப்பட்டது என்றால் கையெழுத்து மாறி உள்ளதாக கூறி திருப்பப்பட்டது. காசோலையின் Sign என்ற இடத்தில் உள்ள கையொப்பமும் அந்த காசோலையின் கையெழுத்தும் வேறு வேறு எழுத்துக்கள் என்றால் தெரியாது. காசோலையில் உள்ள எனது பெயரும், தொகை ஆகிய எழுத்துக்களும், எதிர்மனுதாரர் கையொப்பம் பெற்றதாக உள்ள எழுத்துக்களும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான்.

9. எதிர்மனுதாரும் அவரது கணவரும் என்னிடம் வீட்டில் வைத்து பணம் வாங்கவில்லை என்றாலும் நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும் எதிர்மனுதாரர் கையொப்பம் செய்து எந்தவித காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிற்கும் புகார் மனுவிற்கும் நிரூபண வாக்குமூலத்திற்கும் விரோதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10.புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி 2 மாத தவணை முடிந்து எதிரியிடம் தாங்கள் பணத்தை திருப்பி கேட்டதாகவோ, காசோலையை எந்த தேதியில் செலுத்தினார் ஹானர் செய்யப்படும் என்பதை சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது வங்கி கணக்கு எண் தெரியுமா என்றால் தெரியும். 2024 ம் வருடத்தில் வேறு காசோலை வழக்கு என்னால் இந்நீதிமன்றததில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியாக நினைவில்லை. நான் ரூ.8 இலட்சத்திற்கு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக நினைவில்லை. ம.சா.ஆ.5 ஒப்புகை அட்டையில் எதிரியின் கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பம்

வேறு வேறாக உள்ளது என்றால் சரியல்ல. அதனால் எதிரிக்கு எந்த வித வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்தும் எதிர்மனுதாரருடையது இல்லை என்றால் சரியல்ல. அதனால் எதிரி எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2026.06.04 15:41:38 +0530